# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Website : www.tneo.gov.in


**முன்னிலை: திரு.ஆ. தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல் முறையீட்டு மனு எண் 11 /2015**

திரு. K.G மன்னார்,
211/7, இளைய நல்லூர்(கிராமம்),
K.R. தாங்கல் அஞ்சல்,
விண்ணம்பள்ளி வழி,
காட்பாடி வட்டம்,
வேலூர் மாவட்டம் 632 516 ..... மேல் முறையீட்டாளர்
(திரு. K.G மன்னார்)

எதிர்

மேற்பார்வை பொறியாளர்,
வேலூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
காந்தி நகர், வேலூர் – 632 001. ....... எதிர்மனுதாரர்
(திருமதி. சாரதாம்பாள்,
செயற்பொறியாளர்/காட்பாடி,
திரு. கே. ராமசந்திரன், உதவி
செயற்பொறியாளர்/கர்ணாம்பட்டு)

**கேட்புரை நாள் : 7–4–2015**

**ஆணை நாள் : 8-5-2015**

திரு. K.G மன்னார், இளையநல்லூர் அவர்களின் 21.1.2015 நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண்.11 / 2015 ஆக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுவின் மீது மின் குறைதீர்ப்பாளரின் கேட்புரை 7.4.2015 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், அவரின் எழுத்துப்பூர்வமான வாதுரை மற்றும் கேட்புரை நாளில் இருதரப்பினராலும் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின் குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

<u>ஆணை</u>

**1. <u>மேல்முறையீட்டாளரின் கோரிக்கை :</u>**

அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி அவரிடம் ரூ.9170/– DCW என்று வசூல் செய்த உதவி செயற்பொறியாளர் மற்றும் திருவலம் இளநிலை பொறியாளர் ஆகியோரிடமிருந்து ரூ.13 லட்சம் நஷ்டஈடும் ரூ.2 லட்சம் மன உளைச்சலுக்கும் ஆக ரூ.15 லட்சம் நஷ்டஈடு வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

**2. <u>வழக்கின் சுருக்கம்:</u>**

2.1 மேல்முறையீட்டாளர் சர்வே எண். 508/2ல் உள்ள அவரின் வீட்டிற்கு மின் இணைப்பு வேண்டி மனு செய்துள்ளார். விரிவாக்கம் செய்துதான் மின்இணைப்பு வழங்கமுடியும் என்பதால், மதிப்பீடு அனுமதி பெறப்பட்டு மின்பாதை அமைக்கும்பொழுது ஆட்சேபணை வந்ததால் மாற்றுப்பாதை வழியாக மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. அந்த மாற்று பாதையில் ஒரு கம்பம் மனுதாரரின் நிலத்தில் அமைக்க வேண்டும் என்பதினால் மனுதாரரரின் நிலத்தின் வழியாக வரும் மின்பாதையின் மதிப்பீடு தொகையாக ரூ.9170/– வசூல் செய்யப்பட்டது. ஆனால் அந்தபாதையிலும் மின்பாதை அமைக்க ஆட்சேபனை உள்ளது . எனவே, மின் இணைப்பு வழங்கப்படவில்லை.

2.2 மேல்முறையீட்டாளர் மேற்கண்ட கம்பம் அமைக்கும் இடம், அவருடையது அல்ல என்பதால், அவரிடம் ரு.9170/– DCW முறையில் வசூலித்தது தவறு என்றும், எனவே, அதிகாரத்தை தவறாக பயன்படுத்திய உதவி செயற்பொறியாளர் மற்றும் இளநிலை பொறியாளர் /திருவலம் ஆகியோரிடமிருந்து ரூ.15 லட்சம் நஷ்டஈடாக வேண்டும் என்று வேலூர் மின் பகிர்மான வட்டத்தின் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு மனு செய்துள்ளார். மன்றம் அவருடைய மனுவை தள்ளுபடி செய்துள்ளது எனவே, அந்த தீர்வை எதிர்த்து மேல்முறையீட்டாளர் இந்த மேல்முறையீட்டு மனுவை மின்குறைதீர்ப்பாளரிடம் சமர்ப்பித்துள்ளார்.

**3. <u>மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள்</u>**

3.1 மேல்முறையீட்டாளர் தன்னுடைய 21.1.2015 நாளிட்ட மேல்முறையீட்டு மனுவில் கீழ்கண்ட வாதங்களை சமர்ப்பித்துள்ளார்.

3.2 17.1.2014 அன்று சர்வே எண்.508/2ல் வீடுகட்டி புதிய மின் இணைப்பு வேண்டுமென மனு கொடுத்தார். கார்ணாம்பட்டு உதவி செயற்பொறியாளர் திரு. ரவிசந்திரன் அவர்கள் வேறு ஒருவரின் நிலத்தின் மீது வரும் மின்பாதை மற்றும் கம்பம் ஆகியவற்றிற்கு ரூ.9170/– DCW முறையில் வசூல் செய்தார்.

3.3 தற்போது அந்த பாதையில் மின் ஒயர்கள் அமைக்க ஆட்சேபனை உள்ளது எனவே, ஒயர் அமைக்க முடியாது என இன்றுவரை மின் இணைப்பு தரவில்லை. ஆட்சேபனை உள்ளது எனில் அது அடுத்தவர் நிலம்தானே மின்வயர்கள் வரும் பாதையோ மின்கம்பம் நடும் இடமோ அவர் பட்டாவில் கிடையாது. எனவே அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி அவரிடம் வசூல் செய்த உதவி செயற்பொறியாளர் மற்றும் திருவலம் இளநிலை பொறியாளர் ஆகியோரிடம் ரூ.13 லட்சம் நஷ்டஈடும் மற்றும் ரூ.2 லட்சம் மன உளைச்சலுக்கும் ஆக 15 லட்சம் நஷ்டஈடு வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

4. <u>இசைவிணக்க கூட்டத்தில் ஏற்பட்ட முடிவு</u>

4.1 2.3.2015 அன்று நடைபெற்ற இசைவிணக்க கூட்டத்தில் மேல்முறையீட்டாளர் அவருக்கு மின் இணைப்பு வழங்குவதற்காக விஸ்தரிப்பு பணிகள் செய்ய மதிப்பீட்டில் குறிப்பிட்டுள்ள இரண்டு spanல் ஒரு span திருமதி கிருஷ்ண வேணி, திரு. ராமமூர்த்தி மற்றும் திரு. பாலாஜி ஆகிய நபர்களின் நிலத்தின் வழியாக வரும் மின்பாதையில் மின்கம்பிகளுக்கு (conductor) பதிலாக cable சொந்த செலவில் வாங்கி தர சம்மதம் தெரிவித்துள்ளார். மேற்கண்ட மூன்று பேரிடமும் சம்மதம் பெற்று மின் இணைப்பு வழங்க வேண்டும் என்று மின்வாரியத்தை கேட்டுக் கொண்டுள்ளார். மேலும், அவ்வாறு செய்யும் பட்சத்தில் மின்சார பணியாளர்கள் மீது எந்தவிதமான நஷ்டஈடும் கோரமாட்டேன் என்றும், தெரிவித்துள்ளார்.

4.2 எதிர்மனுதாரரும் திருமதி. கிருஷ்ணவேணி திரு. ராமமூர்த்தி மற்றும் திரு. பாலாஜி ஆகிய நபர்களை அணுகி மனுதாரர் கோரியபடி மின்இணைப்பு தரவேண்டி நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

5. <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>

5.1 மேல்முறையீட்டாளரும், எதிர்மனுதாரரும் தங்களுடைய தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக 17.3.2015 அன்று மின்குறைதீர்ப்பாளர் முன்பு கேட்புரை நடத்தப்பட்டது.

5.2 மேல்முறையீட்டாளர் திரு. K.G. மன்னார் அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதத்தை எடுத்துரைத்தார்.

5.3 எதிர்மனுதாரர் சார்பில் திருமதி. சாரதாம்பாள், செயற்பொறியாளர்/காட்பாடி அவர்களும் திரு. கே. ரவிச்சந்திரன் உதவி செயற்பொறியாளர் கர்ணம்பட்டு அவர்களும் கலந்து கொண்டு தங்களுடைய தரப்பு வாதங்களை எடுத்துரைத்தனர்.

## 6. <u>மேல்முறையீட்டாளர் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்</u>

6.1 மேல்முறையீட்டாளர் தன்னுடைய தன்னுடைய வீட்டிற்கு மின் இணைப்பு கேட்டு சமர்ப்பித்த 17.1.2014 நாளிட்ட விண்ணப்பத்திற்கு இதுவரை மின் இணைப்பு வழங்கப்படவில்லை என்று தெரிவித்தார்.

6.2 முதலில் ஒரு மதிப்பீடு தயார் செய்து அதில் திரு. தியாகராஜன் என்பவர் ஆட்சேபனை இருப்பதால் அந்த மதிப்பீட்டின்படி மின் இணைப்பு வழங்க முடியவில்லை என்று தெரிவித்தார்கள்.

6.3 அடுத்து வேறு வழியாக மின்பாதை அமைத்து ஒரு மதிப்பீடு தயார் செய்யப்பட்டது என்றும், அந்த மதிப்பீட்டின்படி ஒரு கம்பம் மேல்முறையீட்டாளரின் நிலத்தில் வருகிறது என்று தெரிவித்து ரூ.9170/– அவரிடம் வசூலிக்கப்பட்டது என்றும் ஆனால், அந்த பாதை வழியாகவும் மின் இணைப்பு வழங்கப்படவில்லை என்று தெரிவித்தார். அந்த மாறுபட்ட மின்பாதை வழியாக மின்பாதை அமைக்க திருமதி. கிருஷ்ணவேணி திரு ராமமூர்த்தி மற்றும் திரு. பாலாஜி அவர்களும் ஆட்சேபனை தெரிவிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

6.4 மேலும், ஒரு கம்பம், அவருடைய நிலத்தில் அமைப்பதாக கூறி அவரிடம் DCW என்ற முறையில் மதிப்பீடு தயார் செய்து ரூ.9170/– வசூலிக்கப்பட்டுள்ளது. ஆனால், கம்பமும் மின்பாதையும் வேறு ஒருவரின் நிலத்தின் வழியாகத்தான் வருகிறது. எனவே, அவரிடம் ரூ.9170/– வசூலித்தது தவறு என்று வாதாடினார். எனவே, அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி அவரிடம் DCW என்று வசூல் செய்த உதவி செயற்பொறியாளர் மற்றும் இளமின்பொறியாளர் திருவலம் ஆகியோரிடம் ரூ.13 லட்சம் நஷ்டஈடும் ரு. 2லட்சம் மனஉளைச்சலுக்காகவும் ஆக மொத்தம் ரூ.15 லட்சம் நஷ்டஈடு வழங்க வேண்டும் என்று கோரினார்.

6.5 மேலும், அவருக்கு மின்இணைப்பு வழங்குவதற்கு ஆட்சேபனை செய்பவர்களின் ஆட்சேபனையை நீக்கி தனக்கு மின் இணைப்பு தரவேண்டும் என்றும் வாதாடினார்.

## 7. <u>எதிர்மனுதாரரால் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள்</u>

7.1 திருமதி சாரதாம்பாள் செயற்பொறியாளர் அவர்கள் மேல்முறையீட்டாளரின் வீட்டிற்கு மின் இணைப்ப வழங்குவதற்கு 22.1.2015 அன்று மதிப்பீடு அனுமதி பெறப்பட்டது என்றும் ஆனால், அவரின் பக்கத்து நில உரிமையாளர் அவர்களின் நிலத்தின் வழியாக மின்பாதை அமைக்க ஆட்சேபனை செய்ததால் அவருக்கு முதலில் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டின்படி மின் இணைப்பு வழங்க முடியவில்லை என்று தெரிவித்தார்.

7.2 மேல்முறையீட்டாளரின் வேண்டுகோளின் பேரில் மாற்றுப்பாதை வழியாக மின்பாதை அமைக்க மதிப்பீடு தயார் செய்யப்பட்டது என்றும், அந்த மதிப்பீட்டின்படி ஒரு கம்பமும் அதை சார்ந்த மின்பாதையும் மேல்முறையீட்டாளரின் நிலத்தில் வருவதால் அந்த செலவு தொகையாக ரூ.9170/– மேல்முறையீட்டாளரிடம் 25.4.2014 அன்று வசூலிக்கப்பட்டது என்றும் தெரிவித்தார்.

7.3 மேலும், மாற்றுப்பாதை வழியாக கம்பம் நடப்பட்டு மின்பாதை அமைக்கும்பொழுது திருமதி. கிருஷ்ணவேணி திரு ராமமூர்த்தி மற்றும் திரு. பாலாஜி அகியோர்கள் தங்களுடைய ஆட்சேபனையை தெரிவித்துள்ளனர். எனவே, மேற்கண்ட மின்பாதையையும் அமைக்க முடியவில்லை. மேற்கண்ட தகவல் 10.6.2014ல் மேல்முறையீட்டாளருக்கு தெரிவிக்கப்பட்டுவிட்டது என்று வாதிட்டார்.

7.4 மேலும் காவல்துறையின் உதவி கோரப்பட்டு மின்பாதை அமைக்க முயற்சி செய்யப்பட்டது என்றும், ஆனாலும் ஆட்சேபனைதாரர்கள் மின்பாதை அமைக்க விடவில்லை என்றும் தெரிவித்தார்.

7.5 மேலும், மேல்முறையீட்டாளர் தெரிவிப்பது போல் அவருக்கு சொந்தமான இடத்தில் கம்பம் நடப்படவில்லை என்றும் ஆனால் மதிப்பீடு தயார் செய்யும்பொழுது அவரின் நிலத்தில் ஒரு கம்பம் நடப்படும் என்றும் மதிப்பீடு செய்யப்பட்டதால் தான் மேற்கண்ட கட்டணம் வசூலிக்கப்பட்டது என்று வாதிட்டார். ஆனால், கம்பம் அமைக்கும் பொழுது அடுத்தவர் நிலத்தில் அமைக்கப்பட்டுவிட்டது. எனவே, தற்பொழுது கம்பம் நடப்பட்டு இருக்கும் இடத்தின்படி அது நுகர்வோர் சார்பாக என்ற மதிப்பீட்டில் வராது

என்றும் தெரிவித்தார். ஆனால், மதிப்பீடு செய்யும்பொழுது நிகழ்விலிருந்த மின்பகிர்மான விதி 27(6)இன்படி குறைந்த செலவில் உரிமம்தாரர் அமைக்கும் மின்பாதையில் ஆட்சேபனை இருந்தால் மாற்றுபாதையில் ஏற்படும் கூடுதல் செலவையும் விண்ணபப்தாரர்தான் ஏற்க வேண்டும் என்பதால் முதலில் உள்ள மதிப்பீட்டின்படியான ரூ.19,424ற்கு மேல் வரும் செலவு தொகை அனைத்தையும் மேல்முறையீட்டளர்தான் செலுத்தவேண்டும் . இரண்டாவது மதிப்பீட்டின் மொத்த தொகை ரூ.36040+9170) என்பதால் அவர் செலுத்த வேண்டிய தொகை ரூ.25786/– என்றும் வாதிட்டார்.

7.6 மேலும், தற்பொழுது அந்த வழியிலும் மின்பாதை அமைக்க முடியவில்லை என்றும், தற்பொழுது மின்பகிர்மான விதி 27(6) நீக்கப்பட்டுவிட்டதால் அந்த விதி நடைமுறையில் இல்லை என்பதாலும், மாற்றுப்பாதையில் மின்பாதை அமைத்த பின்பு, அவரிடம் திருத்திய மதிப்பீட்டின்படி அவருக்கு பணம் திரும்ப வழங்க வேண்டியது இருந்தால் வழங்கப்படும் என்றும், மேலும், வசூல் செய்யவேண்டியது இருந்தால் வசூல் செய்யப்படும் என்றும் வாதிட்டார்.

## 8. <u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு:</u>

8.1 என் முன்னால் உள்ள இந்த வழக்கிலுள்ள கோரிக்கை என்ன வென்றால் அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி அவரிடம் ரூ.9170/–ஐ DCW என்ற முறையில் வசூல் செய்த உதவி செயற்பொறியாளர் கர்ணம்பட்டு மற்றும் இளநிலை பொறியாளர் திருவலம் ஆகியோரிடமிருந்து ரூ.13 லட்சம் நஷ்டஈடாகவும் ரூ.2 லட்சம் மனஉளைச்சலுக்காக நஷ்டஈடாகவும் பெற்றுத்தரவேண்டும் என்பது ஆகும்.

8.2 எதிர்மனுதாரர் சார்பில் வாதுரை புரிந்த செயற்பொறியாளர் அவர்கள் தற்பொழுது கம்பம் நடப்பட்டுள்ள இடம், மேல்முறையீட்டாளருக்கு உரிமைஇல்லை என்பது சரிதான் என்றும் ஆனால், மதிப்பீடுசெய்யப்படும் பொழுது கம்பம் நடுவதற்கு திட்டமிடப்பட்டஇடம் மேல்முறையீட்டாளருக்கு சொந்தமானது என்பதால் அவ்வாறு மதிப்பீடு தயாராக செய்யப்பட்டது என்றும், ஆனால், கம்பம் நடப்பட்டது அவருடைய நிலத்தில் இல்லை என்பதால் அது நுகர்வோரின் கணக்கில் (consumer side) வரும் மதிப்பீடாக முடியாது என்று தெரிவித்தார்.

8.3 ஆனால், மேற்கண்ட மதிப்பிடு தயார் செய்யும்பொழுது மின்பகிர்மான விதி 27(6) உபயோகத்திலிருந்தது. அந்த விதியின் படி மாற்றுப்பாதையில் அமைக்கப்படும் மின்பாதைக்காக ஏற்படும் அதிகப்படியான மதிப்பீட்டு தொகையை மின்இணைப்பு வேண்டும் விண்ணப்பதாரர் செலுத்த வேண்டும் என்றும் மாற்றுப்பாதை வழியான மதிப்பீட்டுத் தொகை ரூ.(36000+9170) என்பதால மேல்முறையீட்டாளர் அதிகப்படியான தொகையான ரூ.25,786/—ஐ செலுத்த வேண்டும். ஆனால் தவறுதலாக ரூ.9170/— மட்டும் பெறப்பட்டுள்ளது என்றும் வாதிட்டார்.

8.4 மேலும், தற்பொழுது மேற்கண்ட மதிப்பீட்டில் அனுமதியான மின்பாதை வழியாகவும் மின்பாதை அமைத்து மின்இணைப்பு வழங்கமுடியவில்லை என்றும் வேறு மாற்றுப் பாதையிலோ அல்லது ஆட்சேபனையை நீக்கிதான் மின்இணைப்ப வழங்கமுடியும் என்பதால், மின்பாதை அமைத்து அவ்வாறு மின்பாதை அமைக்கும் பொழுது அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டின்படி அவருக்கு பணம் திரும்ப வழங்க வேண்டியது இருந்தால் வழங்கப்படும் என்றும் அல்லது மேலும் கட்டணம்பெறவேண்டியது இருந்தால் பெறப்படும் என்றும் வாதிட்டார். மேலும், தற்பொழுது மின்பகிர்மான விதி 27(6) நடைமுறையிலிருந்து நீக்கப்பட்டுவிட்டது என்ற தகவலையும் தெரிவித்தார்.

8.5 மேல்முறையீட்டாளர், செயற்பொறியாளர், வாதிடுவதுபோல் அவருக்கு மின்இணைப்பு வழங்குவதற்காக ஆட்சேபனையற்ற மின்பாதையின் மதிப்பீட்டின்படி உள்ள தொகையை கணக்கீடு செய்தபின்பு, அதிகப்படியாக தொகை பெற்றிருந்தால் திரும்ப தருவதோ அல்லது குறைவாக பெற்றிருந்தால் மேற்கொண்டு கட்டணம் செலுத்தவோ தான் சம்மதிப்பதாக தெரிவித்தார்.

8.6 மேல்முறையீட்டாளரின் கோரிக்கையான நஷ்டஈடு ரூ.15 லட்சம் வழங்கவேண்டும் என்பதற்கு தீர்வு காண நாம் தமிழ்நாடு மின்குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான விதித்தொகுப்பின் விதி7(11)ஐ ஆராயவேண்டும். அந்த விதி7(11) கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*xxx xxx xxx*
*xxx xxx xxx*
*7(11) குறை முறையீடு, சட்டத்தின் 57 (1) வது பிரிவின்படி, ஆணையத்தால் குறிப்பிடப்பட்டுள்ளஉரிமதாரர் கடைப்பிடிக்க வேண்டிய செயல் திறன் அளவுகளில் நுகர்வோர் சேவைத் திறன்அளவை உரிமதாரர் நிறைவேற்றாமை பற்றியதாக இருந்து, மன்றம் உரிமதாரர் தவறு செய்துள்ளார்என கண்டறிந்தால், நுகர்வோர் இழப்பீட்டுத் தொகை பெற தகுதியுள்ளவர் என முடிவு செய்யலாம்.மேலும், நுகர்வோர் சம்மதித்தால், ஆணையத்தால் இது சம்பந்தமாக*

*வகுக்கப்பட்ட ஒழுங்குமுறைவிதிகளில் குறிப்பிட்டுள்ள இழப்பீட்டுத் தொகையைப் பெற ஒத்துக்கொள்ளலாம் என அறிவிக்கலாம்*
*xxx xxx xxx*
*xxx xxx xxx*

8.7 மேற்கண்ட விதியை கூர்ந்துபடிக்கும்பொழுது நாம் அறிவது ஒழுங்குமுறை ஆணையத்தால் குறிப்பிடப்பட்டுள்ள செயல்திறன் அளவுகளில் நுகர்வோரின் சேவைத்திறன் அளவை உரிமம்தாரர் நிறைவேற்றாமல் இருந்தது பற்றி உரிமம்தாரர் தவறு செய்துள்ளார் என தெரிந்தால் நுகர்வோர் இழப்பீட்டு தொகையை பெறுவதற்கு தகுதியானவர் என்று முடிவு செய்யலாம் என்று தெரிகிறது.

8.8 எனவே, ஆணையம், நிர்ணயித்துள்ள செயல்திறன் அளவுகளை உரிமம்தாரர் கடைபிடிக்காவிடில் வழங்கப்படும் இழப்பீட்டு தொகையை தவிர வேறு நஷ்டஈடு வழங்குவதற்கு மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளில் வழி இல்லை என்று தெரிகிறது.

8.9 இந்த வழக்கில் கோரப்பட்டுள்ள நஷ்டஈடான ரூ.15 லட்சம் என்பது ஒழுங்குமுறை ஆணையத்தால் குறிப்பிடப்பட்டுள்ள செயல்திறன் குறைபாடு சம்பந்தமானது அல்ல என்பதால் மேற்கண்ட நஷ்டஈடு கோரிக்கை என்னால் பரிசீலிக்கப்படவில்லை என்று தீர்வு செய்யப்படுகிறது.

**9. முடிவுரை**

9.1 மேற்கண்ட பத்தி எண்.8, உள்ள தீர்வின்படி மேல்முறையீட்டாளரின் நஷ்டஈடு கோரிக்கை என்னால் பரிசீலிக்கப்படவில்லை என்று தீர்வு செய்யப்படுகிறது.

9.2 மேற்கண்ட தீர்வுடன் மேல்முறையீட்டு மனு எண்.11/2015 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்
1) திரு. K.G மன்னார்,
211/7, இளைய நல்லூர் கிராமம்,
K.R. தாங்கல் அஞ்சல்,
விண்ணம்பள்ளி வழி,
காட்பாடி வட்டம்,
வேலூர் மாவட்டம் 632 516

2) மேற்பார்வை பொறியாளர்,
வேலூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
காந்தி நகர்,
வேலூர் – 632 001.

3) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
வேலூர் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
காந்தி நகர், வேலூர் – 632 001.

4) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

5) செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.

6) உதவி இயக்குநர் (கணினி) – மின்குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர், சென்னை – 600 008.